கள். அதை மீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். காவல் துறையில் இருப்பவர்கள் பொது மக்களைப் பாதுகாக்கவும் அவர்களுடைய உடைமைகளைப் பாதுகாக்கவும், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும் இருக்கிறார்கள். நாட்டிலுள்ள மக்கள் எண்ணிக்கையையும், காவல் துறையினரின் எண்ணிக்கையையும் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது காவல் துறையினருக்குப் பொது மக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்கள் ஆங்காங்கு நடைபெறாமல் தடுக்க முடியும்.

(முற்பகல் 10–10)

ஆகவே, கூடுமான வரையிலே, முன்கூட்டியே அவை தெரிகின்றபொழுது, காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்கிறார்கள். அதையும் மீறி நடக்கிறபொழுது இப்படிப்பட்ட விபரீத சம்பவங்கள், நாமெல்லாம் வருந்தத்தக்க சம்பவங்கள், ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே தான் முறைப்படி வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. உள்ளபடியே, 3 வழக்குகளில் தேடப்பட்டவர் அவர். பயங்கர ஆயுதங்களின் மூலமாகத் தாக்கியதன் காரணமாக, இந்த விளைவுகள் ஏற்பட்டன. வேறு பல சேதங்கள் இல்லாவிட்டாலுங்கூட, வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, வழக்குகள் நடைபெற இருப்பதன் காரணமாகவும் உண்மையான நிலைமைகள் வழக்குகளின் மூலம் வெளிப்படும். குற்றங்களைச் செய்தவர்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்படும். எனவே, இந்த நிலைமையில் அது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொண்டு, இது குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லையென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. அறிவிப்புகள்

(அ) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்ற பகுதிகளை பிரசுரித்த பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம், வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்று, பிறகு இங்கு எழுப்பப்பட்ட சில ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து, அவை அவைக் குறிப்பில் இடம் பெறாது என்று நான் தீர்ப்பு அளித்தேன். ஆயினும் அக்குறிப்புகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. எந்தப் பத்திரிகைகள் என்று நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றவை பிரசுரம் செய்யப்பட்டால் அது அவை உரிமை மீறிய குற்றத்திற்கு உள்ளாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் பத்திரிக்கைகளும் நன்கு அறிவர்.

எனவே, இப்படி வெளியிடப்படுவது இதுவே கடைசி முறையாக இருக்கும் என்று நம்புகிறேன். இனி இம்மாதிரி நிகழுமானால், விதிகளின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு எச்சரிக்க விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

5. அறிக்கை அளித்தல்

உறுப்பினர்களின் விடுதிகளில் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதிகளில் கடைபிடிக்க வேண்டிய சில நெறி முறைகளைக் குறித்து ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களும் அவைக் குழு உறுப்பினர்களும் கூடி, சில பல முடிவுகளை எடுத்தார்கள். அந்த முடிவுகளை நான் அறிவிக்க விரும்புகிறேன். அந்த முடிவுகளுக்கு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் உரிய மதிப் பளித்து, அதைக் கடைப்பிடிக்க ஒத்துழைப்பு தருவதோடு, மற்ற பொது மக்களும் அதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனைவருடைய ஒத்துழைப்பின் பேரில் இந்த விதி முறைகள் ஓரளவுக்கு வரையறை செய்யப் பட்டிருக்கின்றன.

பேரவை, மேலவை கூடும் நாட்களில் உறுப்பினர்களைக் காண வரும் பார்வையாளர்கள் உறுப்பினர்களைக் காண்பதற்கு மாலை 3·00 மணியிலிருந்து 6·00 மணிவரையில் என்று நிர்ணயிக்கப்படுகிறது. பேரவை, மேலவை கூடாத நாட்களில் இந்நேரம் காலை 9·00 மணியிலிருந்து மாலை 6·00 மணி வரை என்று நிர்ணயிக்கப் படுகிறது. இம்மாதிரியான பார்வையாளர்கள் முதலில் வரவேற் பாளர்கள் மூலமாக உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பெற்று, உறுப்பினர்கள் பார்வையாளர்களை அறைகளுக்கு அனுப்ப இசைவு தெரிவித்த பின்பே அவர்களை உறுப்பினர்களது அறைகளுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படும். மற்ற நேரங்களில் பார்வை யாளர்கள் உறுப்பினர்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

உறுப்பினர் அறையில் உறுப்பினருடன் குடும்பத்தினர் அன்றி மற்றவர்கள் தங்கக் கூடாது. குடும்பத்தினர் என்ற சொல்லில் தாய், தந்தை, துணைவியர், குழந்தைகள் மட்டும்தான் அடங்கும். அவர்களும் உறுப்பினர்கள் அறையில் தங்கியிருந்தாலன்றி தனி யாகத் தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு தங்கு வதாக இருந்தால், 5 நாட்களுக்கு மேல் தங்கக் கூடாது. இதற் கான கட்டணம் ஏதும் இல்லை. மற்ற நாட்களில் அதாவது பேரவை, மேலவை மற்றும் குழுக்கள் கூடாத நாட்களில் தற் போதுள்ள விதிகளின்படி கட்டணம் வசூலிக்கப்படும்.